# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 558/2004**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 21.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராஜகோபால் Father's Name : சிங்காரம்

ஆரம்ப நேரம் : 12.24 P.M

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எங்கள் சமுதாயத்தில் கிருஷ்ணசாமி பண்டாரம், சின்னைய பண்டாரம் ஆகிய இருவரும் பெரிய மனிதர்களாக இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணசாமி பண்டாரம், சின்னைய பண்டாரம் ஆகிய இருவரும் தாவா கோவில்கள் தொடர்பாக அசல் வழக்கு எண். 678/1987 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கை நாவக்குறிச்சி கிராம ஜங்கம சமுதாயத்தின் சார்பாக தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகளையும் சேர்த்து 14 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கும், இந்த வழக்கும் ஒரே கோவில்கள் சம்மந்தமான வழக்கு என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.678/1987-ல் நான் வாதிகள் தரப்பு 6-ஆம் சாட்சியாக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதிகள் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானதுதான் என்றால் அதை படித்துப்பார்த்தால்தான் என்னால் கூற இயலும்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.21.01.2026.

3. மேற்படி வழக்கில் நான் அளித்த சாட்சியம் சரியானது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை இவ்வழக்கில் எனது தரப்பின் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாவா கோவில்கள் பொது கோவில்கள் என விளம்புகை கோரியும், தாவா கோவில்களில் நடைபெறும் பூஜைகள், திருவிழாக்கள், விசேஷங்களில் வாதிகள் பங்கு பெறுவதை பிரதிவாதிகள் தடை செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கின் தீர்ப்பில் தாவா கோவில்களில் பிரதிவாதிகள் நடத்தும் திருவிழாக்கள் மற்றும் பூஜைகளில் வாதிகள் கலந்து கொள்ளமட்டுமே தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு பின்னிட்டு தாவா கோவில்களில் பல திருவிழாக்கல் நடைபெற்றது என்றால் சரியல்ல, கடந்த 2023-ஆம் ஆண்டு மட்டும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்காக உத்தரவு பெற்று கோவிலை வெள்ளையடித்து கோவிலில் கும்பாபிஷேகம் செய்தார்கள். இவ்வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து தெரிவிக்காமல் மேற்படி உத்தரவை வாங்கினார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி தீர்ப்பிற்கு பின்னிட்டு பல விழாக்களை பிரதிவாதிகள் தரப்பினர்கள் தாவா கோவில்களில் நடத்தினார்கள் என்றாலும், எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும் அந்த திருவிழாக்களில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த திருவிழாக்களும் நடைபெறவில்லை

5. எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தாவா கோவில்களில் திருவிழாக்களை நடத்தினோமா என்றால் இரு தரப்பினருமே எந்த திருவிழாக்களையும் நடத்தவில்லை. தாவா கோவில்களுக்கு எங்கள் சமுதாயத்தின் சார்பாக 10 பைசாவாவது செலவு செய்தோமா என்றால் எங்களை உள்ளே அனுமதித்தால்தான் செலவு செய்ய முடியும். எங்கள் சமுதாயத்தின் சார்பாக கோவில்களுக்கு செலவு செய்ய தொகை வைத்திருப்பது தொடர்பான ஆவணங்களை அரசாங்கத்திடம் சமர்த்துள்ளோமா என்றால் இல்லை, மனுதான் கொடுத்துள்ளோம்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.21.01.2026.

6. மேற்படி மனுவில் எங்கள் சமுதாயத்தின் சார்பாக கோவில்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறித்து குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. அ.வ.எண்.678/1987-ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி தாவா கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களில் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டோமா என்றால் எந்த திருவிழாக்களும் நடைபெறவில்லை, திருவிழாக்கள் நடந்தால்தான் கலந்து கொள்ள முடியும்.

7. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் திருவிழாக்களை நடத்த ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு சரியில்லை என்பதால்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வழக்கை எதிர்த்து வாதிகளோ அல்லது அவரது வாரிசுகளோ மேல்முறையீடு செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி வழக்கானது எங்கள் சமுதாயத்தின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தை சேர்ந்த யாரேனும் மேற்படி வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை.

8. மேற்படி வழக்கின் தாவா கோவில்கள் தொடர்பாக மீண்டும் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் பிரதிவாதிகள் மீது இந்நீதிமன்றத்தில் ஒரு நிறைவேற்று மனு எண்.50/2005 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனு முழு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவின் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை.

9. எங்கள் தரப்பில் எவ்வித நியாயமான காரணங்கள் இல்லாததால்தான் அ.வ.எண்.678/1987, நிறைவேற்று மனு எண்.50/2005 ஆகியவற்றின் மீது எவ்வித மேல்முறையீடும் தாக்கல் செய்யாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கோவில்கள் தொடர்பாக அ.வ.எண்.285/1996 என்ற வழக்கை நானும்,

முருகேசன் என்பவரும் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கை பழனிமுத்து கவுண்டர் உட்பட 8 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்தோம் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

10. மேற்படி வழக்கு கடந்த 03.11.1997 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கு சம்மந்தமாக எங்கள் தரப்பில் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் வழக்கு நிலுவையில்தான் இருக்கும். அ.வ.எண்.678/1987, REP.50/2005 மற்றும் அ.வ.எண்.285/1996 ஆகிய வழக்குகளை பற்றி குறிப்பிடாமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இவ்வழக்கானது முன் தீர்ப்பு தடை கோட்பாட்டின் கீழ் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல. அ.வ.எண்.285/1996-ஐ பற்றி வேண்டுமென்றே இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றாலும், உண்மையை மறைத்து தவறான சங்கதிகளுடன் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

11. நான் தாக்கல் செய்த REP.50/2005-ம், இவ்வழக்கும் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். REP.50/2005 தள்ளுபடி செய்யப்பட்டதால் மீண்டும் ஒரு நிறைவேற்று மனுவை (Contempt E.P) தாக்கல் செய்துள்ளோம். REP.50/2005 கடந்த 27.10.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா கோவில்களில் எந்த முறைகளில் திருவிழாக்கள் நடைபெறும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடந்த 1971-ஆம் ஆண்டிலிருந்து தாவா கோவில்களில் எந்த திருவிழாக்களும் நடைபெறவில்லை.

12. எங்கள் சமுதாயத்தின் பெரியவர்களான கிருஷ்ணசாமி பண்டாரம், சின்னைய பண்டாரம் ஆகியோர்கள் எந்த முறையில் தாவா கோவில்களில் பூஜைகள் மற்றும் திருவிழாக்களை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினார்களா என்றால் இல்லை.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.21.01.2026.

கிருஷ்ணசாமி பண்டாரம் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். அவர் இறக்கும் பொழுது அவரின் வயது 75 இருக்கும். சின்னையா பண்டாரம் எப்பொழுது இறந்தார் என்றால் அவர் கிருஷ்ணசாமி பண்டாரத்திற்கு முன்பே இறந்துவிட்டார்.

13. எங்கள் சமுதாயத்தை சேர்ந்த கிருஷ்ணசாமி பண்டாரம், சின்னைய பண்டாரம் மற்றும் அவர்களது முன்னோர்கள் யாருமே தாவா கோவில்களில் திருவிழாக்களை நடத்தவில்லை என்பதால்தான் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பன்னெடுங்காலமாக பரம்பரை பரம்பரையாக தாவா கோவில்களில் பிரதிவாதிகள்தான் திருவிழாக்கள், பூஜைகள், புனரமைப்புகள் செய்து வருகின்றனர் என்றாலும், எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எந்த காலத்திலும் மேற்படி பணிகளை செய்ததில்லை என்றாலும் பிரதிவாதிகளின் நடவடிக்கைகளில் தலையிட எங்கள் சமூகத்தினருக்கு எவ்வித உரிமை இல்லை என்றாலும் சரியல்ல, தாவா 9 கோவில்களும் இந்து அறநிலையத்துறையை சேர்ந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், வடகரையான் கோவிலும், மலையம்மன் கோவிலும் நாவக்குறிச்சி கிராம ஊராளி கவுண்டர் சமூகத்திற்கு சொந்தமான குல தெய்வ கோவில்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சமூகத்தை சேர்ந்த சொந்த இடத்தில் மேற்படி கோவில்கள் இல்லை.

14. ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்த ஸ்ரீராமன் என்பவர் வடகரையான் (எ) முத்தையா கோவிலில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற W.P.14359/2023 என்ற மனுவின் உத்தரவின்படி கும்பாபிஷேகம் நடத்தினார் என்றால் மேற்படி கோவிலில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கென்று உத்தரவு பெற்றுவிட்டு வெள்ளையடித்து கும்பாபிஷேகம் நடத்திவிட்டார்கள். ஊராளி கவுண்டர் சமூகத்திற்கு உரிமை இருந்ததால்தான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் திருவிழா நடத்த அனுமதி அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.21.01.2026.

15. அதேபோல் ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்த நாட்டாமை செல்வராஜ் என்பவர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் WP.No.15805/2023 என்ற மனுவை தாக்கல் செய்து மலையம்மன் கோவிலுக்கு ஊரணி பொங்கல் வைத்து விழா நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 3-ஆம் வாதி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.15382/2023 என்ற மனுவை தாவா கோவிலான வடகரையான் (எ) முத்தையா கோவிலில் கும்பாபிஷேகம் நடத்தக்கூடாது என்று பிரதிவாதிகள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

16. நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.13638/2023 என்ற மனுவை தாவா கோவிலான வடகரையான் (எ) முத்தையா கோவிலில் திருவிழாவை நாங்கள் நடத்தவேண்டுமென்று தாக்கல் செய்தேன் என்றாலும், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான்.

2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைதொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.30 P.M.

Taken down before / by me in open court
and read over / interpreted to the witness
and acknowledged by him / to be correct

Sd/D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.21.01.2026.